## இது சிறுதானியங்களின் சங்கமம்…திருப்பூர் வேளாண் விற்பனைக் கூடம்…

25.06.2013




இரவல் சீலையை நம்பி, இடுப்புக் கந்தையை எறிந்த கதையாக, உடலுக்கு ஆரோக்கியத்தை அள்ளிக் கொடுக்கும் சிறுதானியங்களை ஒதுக்கிவிட்டு… நோய்களுக்கு வரவேற்பு வைக்கும் உணவுகளைத்தான் பெரும்பாலும், நாம் சாப்பிட்டு வருகிறோம். உணவால் விளையும் அபாயத்தை உணர்ந்து பலரும், சிறுதானியங்களைத் தேட ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்காகவே ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் திருப்பூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், சிறுதானிய விற்பனை நடந்து வருகிறது. அந்த விற்பனைக் கூடத்தை ஒரு வலம் வந்தோம். கொண்டு வந்திருந்த வெள்ளைச் சோளத்திலிருந்து கொஞ்சத்தை கையில் அள்ளி, நம்மிடம் காட்டிக் கொண்டிருந்தார், காமநாயக்கன்பாளையம் ஈஸ்வரன்.

பத்து வருடமாக இந்த ஒழுங்குமுறை வந்து கொண்டிருக்கிறேன். பருத்தி, சோளம், கொண்டைக் கடலையைக் கொண்டு வந்து விற்பேன். சீஸனுக்கு தகுந்த மாதிரி எல்லா தானியங்களுமம் விவசாயிகள் இங்கே கொண்டு வந்து விற்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களிலிருந்தும், கர்நாடகா, கேரளாவிலிருந்தும் கூட விவசாயிகள் வருகின்றனர். ஏகப்பட்ட வியாபாரிகளும் வருகிறார்கள். அதனால், உடனடியாக விற்பனையாகி பணம் கிடைக்கிறது. இன்றைக்கு 50 மூட்டை சோளம் கொண்டு வந்தேன். குவிண்டால் 3 ஆயிரம் ரூபாய் என்று பேசி விற்றாகிவிட்டது. அந்த காசில் தீவனத்திற்காக பத்து மூட்டை மக்காச்சோளம் வாங்கிகொண்டு போலாம் என்று இருக்கிறேன் என்றார்.

குடோனில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தினை மூட்டைகளிலிருந்து, அங்குசத்தில் குத்தி எடுக்கப்பட்ட தினையை, கையில் ஏந்திப் பார்த்துக் கொண்டிருந்த உடுமலைப்பேட்டை வியாபாரி ஈஸ்வரன், இன்னிக்கு சிறுதானியங்களில் தினைக்குத்தான் ரொம்ப கிராக்கி. தமிழ்நாட்டில்தான் தினை விவசாயம் குறைந்துகொண்டே வருகிறது. ஆனால், மைசூர் பகுதியில் தினை விளைச்சல் அதிகம். அதனால் அந்த விவசாயிங்க தினை மூட்டைகளை விற்பதற்காக இங்க வருகிறார்கள். நான் பல இடங்களுக்கு அனுப்புகிறேன். குறிப்பாக, குழந்தைகளுக்கான சத்து மாவு தயாரிப்பதற்கு தினை அதிகமாக தேவைப்படுகிறது.



ஈஸ்வரன்
(காமநாயக்கன்பாளையம்)



சக்திவேல்

இன்றைய தேதியில் குவிண்டால் இரண்டாயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது. தேனி மாவட்டத்திலிருந்த கம்பும், கிருஷ்ணகிரியிலிருந்து கேழ்வரகும் இங்கே வருகிறது. கோடை காலமாக இருப்பதால் கம்புக்கான தேவையும் அதிகமாக இருக்கிறது. கம்புக்கு வருடம் முழுக்க நல்ல விலை கிடைக்கிறது. இன்றைய தேதியில் ஒரு குவிண்டால் கம்பு, ஆயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபாய் என்று விலை போகிறது. ஒரு குவிண்டால் கேழ்வரகு இரண்டாயிரத்து நானூறு ரூபாய் என்றார்.

எங்கள் பகுதியில் மிளகாய் விவசாயம் பிரதானம். அதுவும் மானாவாரி பயிராக நூற்றுக்கணக்கான ஏக்கரில் சாகுபடி பண்றோம். நாங்க மிளகாயைப் பச்சையாக விற்காமல், வத்தலாகத்தான் விற்போம். இந்த சந்தையில் மற்ற ஊர்களைவிட, அதிக வியாபாரிகள் வருவதால் நல்ல விலை கிடைக்கிறது. அதனால்தான் நான் தூரம் பார்க்காமல் இங்க கொண்டு வந்திருக்கிறேன். எங்க ஊரிலிருந்து நிறைய பேர் இங்கதான் வருவோம். 200 மூட்டை வற்றல் மிளகாயைக் கொண்டு வந்தேன். குவிண்டால் ஆறாயிரம் ரூபாய் என்று விலை தீர்ந்துவிட்டது. இப்படி நியாயமான விலை கிடைப்பதால், 7 வருடமாக ஒவ்வொரு செவ்வாய், கிழமையும் இங்கே வந்து கொண்டிருக்கிறேன் என்கிறார் கோவலில்பட்டி அடுத்துள்ள

கடலையூரிலிருந்து வந்திருந்த சக்திவேல். ஒழுங்குமுறை வேளாண் விற்பனைக் கூடத்தின் கண்காணிப்பாளர் சண்முகம், இது, 1936-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் முதல் முதலில் துவக்கப்பட்ட விற்பனைக் கூடம் இதுதான். பருத்தி விற்பனையில் முன்னணி வகித்த பெருமை இதற்கு உண்டு. தொடர்ந்து, 98-ம் ஆண்டு முதல் இங்கு சிறுதானியங்கள் மற்றும் பயறுவகை விற்பனையும் துவங்கப்பட்டது. சோளம், கம்பு, ராகி, பாசிப்பயறு, நரிப்பயறு, துவரை, எள், மல்லி, உளுந்து, கொண்டைக்கடலை, வத்தல் மிளகாய் மற்றும் தேங்காய் உள்ளிட்ட விளைபொருட்கள் விற்பனையாகின்றன. ஒவ்வொரு வாரமும் சராசரியாக 100 டன் முதல் 150 டன் வரை விளைபொருட்கள் விற்பனைக்கு வருகின்றன. ஓபன் டெண்டர், மறைமுக ஏலம், நேரடி விற்பனை என மூன்று முறைகளில் இங்கு வியாபாரம் நடந்தாலும், விவசாயிகளிடம் இருந்து, ஒரு பைசா கூட கமிஷன் வாங்குவதில்லை. வியாபாரிகளிடம் மட்டும் 1% விற்பனை வரி வாங்குகிறோம். கொண்டு வரும் விளைபொருட்களை விற்க விரும்பாமல், கூடுதல் விலையை எதிர்பார்க்கும் விவசாயிகள், குறிப்பிட்ட அளவு சரக்கை எங்கள் குடோனில் இருப்பு வைக்கலாம். அதற்கு 2 லட்ச ரூபாய் வரை பொருளீட்டுக் கடனும் கொடுக்கிறோம் என்றார். வெளிமாவட்டங்களிலிருந்து, இங்கு விளைபொருட்களை விற்கவோ, வாங்கவோ வருபவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு வரத்து மற்றும இருப்பு விவரங்களைத் தெரிந்து கொண்டு வருவது நல்லது என்றார்.

| **திருப்பூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில், 3.6.2013 நிலவரப்படி விலைநிலவரம்** | |
|---|---|
| **(குவிண்டால் விலை ) ரூபாய் மதிப்பில்** | |
| சோளம் | 1,800 முதல் 2,000 வரை |
| கம்பு | 1,800 முதல் 2,200 வரை |
| தினை | 2,000 முதல் 2,300 வரை |
| கேழ்வரகு | 1,500 முதல் 1,700 வரை |
| பாசிப்பயறு | 5,800 முதல் 6,000 வரை |
| வத்தல் மிளகாய் | 5,000 முதல் 6,000 வரை |
| கொத்தமல்லி | 6,000 முதல் 7,00 வரை |
| தேங்காய் | 800 முதல் 900 வரை |
| எள், நிலக்கடலை, சாமை, வரகு, மக்காச்சோளம் மற்றும் கொள்ளு, தட்டைப்பயறு, நரிப்பயறு உள்ளிட்ட பல விளைபொருட்கள் அவைகளுக்கு ஏற்ற அறுவடை சீசனில் இங்கு விற்பனைக்கு வரும். | |

தொடர்புக்கு

தொலைபேசி : 0421 – 2212141

(காலை 10 மணி முதல் 5 மணி வரை)

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.06.13 www.vikatan.com**